ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/27 - 2022 දෙසැම්බර් මස 14 වැනි බදාදා - 2022.12.14

*2310/27 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவு மற்றும் 19 ஆம் பிரிவு ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரொஷான் ரணசிங்க (பா.உ.),**
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2022, திசெம்பர் 14.*

**ஒழுங்குவிதிகள்**

*1976 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 241/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 20 ஆந் திகதிய 385/7A ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் அத்துடன் 1993 ஆம் ஆண்டின் யூன் மாதம் 29 ஆந் திகதிய 773/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும் திருத்தம் செய்யப்பட்டதுவுமான இலங்கை ஒலிம்பிக் கமிட்டி ஒழுங்குவிதிகளில் 9 ஆம் ஒழுங்கு விதிக்கு மேலதிகமாக கீழே காட்டப்பட்டுள்ள புதிய ஒழுங்குவிதிகளை உட்சேர்த்து கூறப்பட்ட ஒழுங்குவிதிகளானது மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.*

1A - G 38348 — 07 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*10)* தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய மூன்று பதவிகளில் ஏதாவது ஒரு பதவியில் பதவியினை வகிக்கக் கூடிய உச்சளவு காலத்தின் கூட்டுத்தொகையானது அல்லது கூறப்பட்ட இரண்டு பதவிகளின் மொத்த சேவைக் காலத்தின் கூட்டுத்தொகையானது இரண்டு (02) பதவிக் காலங்கள் அதாவது எட்டு (08) வருடங்களாதல் வேண்டும்.

எனினும், இவ் ஒழுங்குவிதிகள் அமுலாக்கப்படும் திகதியாகும் போது தேர்தலின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள பதவி தாங்குநர்கள் தொடர்பாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள பதவிக் காலம் முடிவடையும் வரையில் கூறப்பட்ட பதவிகளை வகிப்பதற்கு மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதியானது இடையூறாக இருத்தல் கூடாது.

*11)* பதவிக் காலங்கள் இரண்டில் பதவி வகித்துள்ள எந்தவொரு தலைவரும் எந்தவொரு பதவிக்கும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராவார் எனினும், சங்கத்தின் உறுப்புரிமையை வகிப்பதற்கு தகுதியற்றவர் ஆதல் கூடாது.

*12)* எந்தவொரு பதவிதாங்குநரினது அல்லது குழு உறுப்பினர் ஒருவரினது கூறப்பட்ட பதவிக் காலத்தினை வகிக்கக் கூடிய உச்சளவு வயதெல்லை எழுபது (70) வருடங்களாக மட்டுப்படுத்தப்படும். எனினும், இவ் ஒழுங்குவிதிகள் அமுலாக்கப்படும் திகதியாகும் போது தேர்தலின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள தலைவர் உள்ளடங்கலான ஏனைய பதவி தாங்குநர்கள் தொடர்பாக, அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள பதவிக் காலம் முடிவடையும் வரையில் கூறப்பட்ட பதவிகளை வகிப்பதற்கு மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதியானது இடையூறாக இருத்தல் கூடாது.

EOG *12-0205*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.